உ

சிவமயம்



யாழ் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்தவரும்

கோப்பாய் மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியையும்

திருநெல்வேலி மாதர் சங்கத் தலைவியும்

லண்டனை இறுதிக்கால வதிவிடமாகவும் கொண்டவரும்

அமரர் திரு நடராஜாவின் அன்புத் துணைவியுமான

திருமதி பாக்கியம் நடராஜா அவர்களின்

# நினைவு மலர்

02.05.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமதி பாக்கியம் நடராஜா அவர்கள்



மண்ணில்
19.12.1915

விண்ணில்
02.04.2005

## திதி வெண்பா

ஆண்டு தாரண அமைந்த பங்குனியில்
பூண்ட அபரபக்க அட்டமியில் - மாண்பு
நடராஜா பத்தினியார் நனிசிறந்த பாக்கியம்
நடராஜன் தாளடைந்தார் காண்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி பாக்கியம் நடராஜா அவர்கள் தாரண வருடம் பங்குனி மாதம் சனிக்கிழமை 20ம் நாள் காலை பூராட நட்சத்திரமும் அபரபட்ச அட்டமி திதியும் கூடிய 02.04.2005 அன்று சிவபதமடைந்தார். அன்னார் கோப்பாய் மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியையும், திருநெல்வேலி மாதர் சங்கத்தலைவியும், காலம் சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற பொன்னையா பறுவதத்தின் மூத்த மகளும், காலம் சென்ற சதாசிவம் செல்லாச்சியின் மருமகளும் ஆவார்.

மண்ணுலகைத் துறந்து இறைவன் திருவடியில் ஆனந்தத் துயில் புரிகின்ற எங்கள் அம்மாவுக்கு இந்நூல் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஓம் சிவமயம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை இணையடி நீழலே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே !

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்கஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அம்மா

என் அன்பு மாமியாராகவும், அவரின் மருமகளாகவும், வந்து அவர் செல்வப் புதல்வன் சிறீதரனைக் கரம் பிடித்து இத்தனை ஆண்டு காலமாக வாழ்ந்து மாமாவின் அன்புக்கும் ஆதரவுக்கும் அவர்களுடன் எனது அன்பு இனியவராக எனது நன்றி கடமையாக அவர்களது அன்பும் பண்பும் பாசமும் உள்ளராக நானும் என் கணவரும் அவர்களது இறுதி வரை கடமை செய்ய எங்களுக்கு ஆண்டவர் கொடுத்த புண்ணியம் அவரையே சாரும்.
எங்கள் இதயம் நிறைந்த அன்பு அம்மாவுக்கு எமது
கண்ணீர்த்துளிகள் காணிக்கை.

அன்பு மகன் சிறீதரன்
மருமகள் கமலாதேவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லத்து ஒளிவிளக்கு

இம்மண்ணிலிருந்து எம்மை எல்லாம் மகிழ்ச்சியில் வாழ்த்தி
இன்று எமைப்பிரிந்து இறைவனடி சென்றீர்.
இல்லத்து ஒளிவிளக்கை நாம் இழந்தோமா,
சொல்லத்தான் வார்த்தையின்றித் துடிக்கின்றோம்.
உங்கள் துயரத்தால் இமையும் மூட மறுக்கின்றோம்.
நாருக்கும் உண்டான பூவின் மணம்போல் நாங்கள் சீரும் சிறப்பும்
பெற்றோம். உங்களால் அம்மா பேருக்கு முன் இவன் பிள்ளை
யென்று எமக்குப் பெருமை கொள்ள மதிப்புத் தந்தீர்.
யாருக்கும் சொல்லாமல் இறைவனடி சேர்ந்தீர்.
அவரின் ஆத்மா சாந்தியடை வேண்டுகின்றோம்.

மகன்மார், மகள், மருமகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மனோகரராஜா, சோமாவதி, சத்தியேஷ், கிருஷானி,
இராஜேஸ்வரன், சந்திரலேகா, ஜனார்த்தனன், லோகதாஸ்,
சுகன்யா, பிரஷாந்தன், பவித்திரா
சிறீதரன், கமலாதேவி
சற்குணராஜா, பாலரோகிணி, சுஜித்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பொன்னையா பறுவதம் தம்பதியினரின்
பொன்னான கரங்களிலே
பூவாக மலர்ந்தாயம்மா
நடராஜாவின் கரம்பற்றி
மகாராணி போல் வாழ்ந்து - நல்
நான்மணிகளைப் பெற்றெடுத்தாய்
பேரக்குழந்தைகளைப் பேராசையோடு
கட்டித் தழுவிய காலம் மறந்து - எமை
விட்டுச் சென்றது எங்கே?
குதூகலமாய் இருந்ததெல்லாம்
கண் முன்னே இன்று
குற்றுயிராய்ப் போனதம்மா
விடியும் ஒவ்வொரு இரவும்
உமக்காக ஏங்குகின்றோம்
சூரியன் கூட சூனியமானது
ஒன்பது தசாப்தங்கள் பூவுலகு போதுமென்று
சொர்க்க உலகு வரவேற்க - அம்மன்
சேவடி காண்பதற்காக
முகமலர்ந்து சென்றீரோ?
துணையாக இல்லையென்று
நினைக்கும் வேளைகளில்
துயர் துடைக்க இங்கு
யாரும் இல்லையம்மா
வேதனைகள் யாவும் எங்கள்
விழி நீராய்ச் சொரிகின்றன
சிதையினில் உம் உடல் வேகிய பின்னும்
காலமெல்லாம் எம் நெஞ்சில்
சிதையாமல் வீற்றிருப்பாயம்மா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

உம் காலடியில் எம் கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.
பேர்த்தி(பவி)
பவித்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் அன்பிற்குரிய

திருமதி பாக்கியம் நடராஜாவின்

மரணச் செய்தியை அறிந்து

தங்கள் துக்கத்தை

நேரிலும் தொலைபேசியிலும்,

கடித மூலமாகவும், தெரியப்படுத்தியோர்க்கும்,

அவரது தகனக்கிரியை, அந்தியேட்டி

ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும்,

பலவகைகளில் உதவி புரிந்தோர்க்கும்

எங்களது உளமார்ந்த நன்றிகள்.

மகன் சிறீதரன்,
மருமகள் கமலாதேவி

Printed by **JR PRINT** London Tel: 020 8503 6643 www.jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org